# கர்த்தர் உனக்காக யுத்தம் பண்ணுவார்



பாடம் 5

நவம்பர் 1, 2025


“அந்த ராஜாக்கள் எல்லாரையும்
அவர்கள் தேசத்தையும் யோசுவா
ஒருமிக்கப் பிடித்தான்;
இஸ்ரவேலின் தேவனாகிய
கர்த்தர் இஸ்ரவேலுக்காக
யுத்தம்பண்ணினார்.”
யோசுவா 10:42


கானான் தேசத்தை இஸ்ரவேலர் கைப்பற்ற வழிவகுத்த போரை புரிந்துகொள்வது எளிதான காரியமல்ல.

பாவம் இருக்க வேண்டும் என்று தேவன் ஒருபோதும் நோக்கம் கொண்டதில்லை என்பது போல, போர் இருக்க வேண்டும் என்றும் அவர் நோக்கம் கொண்டதில்லை.

அப்படியானால் ஏன் இவ்வளவு பேர் இறந்தார்கள்? அந்த போரை “புனிதமானது” என்று கருத முடியுமா?

இந்த பிரச்சனையை புரிந்துகொள்ள, வரலாற்றின் முக்கியமான தருணத்தில் போரை பற்றிய வேதத்தின் கருத்தையும் ஆபத்தில் உள்ள தார்மீக மதிப்புகளையும் நாம் ஆராய வேண்டும்.





- அக்கிரமம் பற்றிய விஷயம்
- நீதி தொடர்பான விஷயம்
- போர் பற்றிய வேதத்தின் கருத்து
- அவர்களின் சொந்த விருப்பத்தால் அழிக்கப்பட்டது
- அமைதியை தேடுதல்

# அக்கிரமம் பற்றிய விஷயம்

"நாலாம் தலைமுறையிலே அவர்கள் இவ்விடத்துக்குத் திரும்ப வருவார்கள்; ஏனென்றால் எமோரியருடைய அக்கிரமம் இன்னும் நிறைவாகவில்லை." (ஆதியாகமம் 15:16)



கானானின் மதம் வேதம் சொல்வது போலவே இருந்தது என்பதை தொல்பொருள் ஆராய்ச்சி வெளிப்படுத்தியுள்ளது: பில்லிசூனியம், குறிசொல்லுதல், இறந்தவர்களுடன் தொடர்பு கொள்ளுதல், ஆவி மார்க்கம்... மற்றும் பிள்ளைகளை பலி கொடுக்கிறவன்! (உபா. 18:9-12).

இதனுடன், புனிதத்தன்மையுடன் மிகக் குறைந்த அளவே தொடர்புடைய "புனித விபச்சார" சடங்கையும் சேர்க்க வேண்டும் - இது பாதிரியார்கள் மற்றும் பாதிரியம்மாக்கள் இருவராலும் கடைபிடிக்கப்படுகிறது

ஆபிரகாமின் காலத்தில் இந்த பழக்கவழக்கங்கள் ஏற்கனவே பொதுவானதாக இருந்த போதிலும், அவர்களுடைய நடத்தையை சரிசெய்ய தேவன் அவர்களுக்கு 100 ஆண்டுகளுக்கும் மேலாக அவகாசம் கொடுத்தார்.





இறுதியாக, மனித ஒழுக்கத்தை குறைத்து, எல்லா வகையான தீமைகளையும் வளர்த்த இந்த முறைகேடான சடங்குகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியிருந்தது. கானானியர்களை அழிப்பது—குறைந்த பட்சம் ஒரு காலத்திற்கு—மனித குலத்தின் ஒழுக்க சீரழிவை தடுக்கும்.




# நீதி தொடர்பான விஷயம்

"தேவன் நீதியுள்ள நியாயாதிபதி; அவர் நாள்தோறும் பாவியின்மேல் சினங்கொள்ளுகிற தேவன். அவன் மனந்திரும்பாவிட்டால் அவர் தம்முடைய பட்டயத்தைக் கருக்காக்குவார்; அவர் தம்முடைய வில்லை நாணேற்றி, அதை ஆயத்தப்படுத்தியிருக்கிறார்." (சங்கீதம் 7:11-12)



அன்பும் நீதியும் தேவனுடைய குணத்தின் அடித்தளமாகும். இது அவரை ஒரு நீதியுள்ள மற்றும் பாரபட்சமற்ற நீதிபதியாக ஆக்குகிறது. அவர் பாவி மனந்திரும்புவதற்காக தண்டனையை ஒத்தி வைக்கிறார். ஆனால் தீமையை என்றென்றும் பொறுத்துக் கொள்ளமாட்டார்.

கானானை கைப்பற்றுவதற்காக ஏகாதிபத்திய காரணங்களுக்காக நடத்தப்படவில்லை, மாறாக அதன் பொல்லாத மக்களுக்கு தகுதியான தண்டனையை நிறைவேற்றுவதற்கான தெய்வீக உத்தரவின் பேரில் நடத்தப்பட்டது.



அந்த பிரதேசத்தில் ஒரு நீதியான அரசாங்கத்தை நிறுவுவதே தேவனுடைய விருப்பமாக இருந்தது, அது அனைத்து நாடுகளுக்கும் ஒரு முன்மாதிரியாக இருக்கும், அவர்களின் தார்மீக கருத்துக்களை உயர்த்த அவர்களை ஊக்குவிக்கும், இதன்மூலம் உலகளவில் அமைதி மற்றும் நீதி நிலையை அடைய வேண்டும் (உபா. 4:5-6).

ஒரு மாவீரனாகவும் நீதிபதியாகவும், தேவனுடைய சட்டத்தின் ஆட்சியை செயல்படுத்துவதற்கும், நிலைப்படுத்துவதற்க்கும், பராமரிப்பதற்கும், உறுதிபூண்டுள்ளார், இது அவரது குணத்தின் பிரதிபலிப்பாகும் .

# போர் பற்றிய வேதத்தின் கருத்து


“உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு முன்பாகக் கடந்துபோகிறவர் என்பதை இன்று அறியக்கடவாய்; அவர் பட்சிக்கிற அக்கினியைப்போல அவர்களை அழிப்பார்; அவர்களை உனக்கு முன்பாக விழப்பண்ணுவார்; இவ்விதமாய்க் கர்த்தர் உனக்குச் சொன்னபடியே, நீ அவர்களைச் சீக்கிரமாய்த் துரத்தி, அவர்களை அழிப்பாய்.” (உபாகமம் 9:3)

வேதாகமத்தின்படி, போர்கள் குறிப்பிட்ட சூழநிலைகளுக்கு மட்டுமே வரையறுக்கப்பட வேண்டும், மேலும் அவை தேவனால் வரையறுக்கபட்டன. இவை தேவனால் அங்கீகரிக்கப்பட்ட போர்களை நிர்வகிக்கும் விதிகள்:





- ஒரு தொழில்முறை இராணுவம் அனுமதிக்கப்படவில்லை
- வீரர்களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை, சில சமயங்களில் கொள்ளையடித்த பொருட்களை கூட எடுக்கமுடியவில்லை
- அந்த குறிப்பிட்ட வரலாற்று தருணத்தில், வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தை கைப்பற்றுவதற்கோ அல்லது பாதுகாப்பதற்கோ மட்டுமே போர் அனுமதிக்கப்பட்டது
- அவர்கள் தேவனால் ஏவப்பட்ட தீர்க்கதரிசிகளால் வழிநடத்தப்பட்டனர் (மோசே மற்றும் யோசுவா போன்றவர்கள்)
- போருக்கு முன் ஆவிக்குரிய ஆயத்தம் தேவைப்பபட்டது
- போர் விதிகளுக்கு கீழ்படியாத எந்த இஸ்ரவேலனும் எதிரியாக நடத்தப்பட்டான்
- பல சந்தர்ப்பங்களில், தேவன் நேரடியாக போரில் தலையிட்டார்



# அவர்களின் சொந்த விருப்பத்தால் அழிக்கப்பட்டது


“இப்படியே யோசுவா மலைத்தேசம் அனைத்தையும் தென்தேசத்தையும் சமபூமியையும் நீர்ப்பாய்ச்சலான இடங்களையும் அவைகளின் எல்லா ராஜாக்களையும், ஒருவரையும் மீதியாக வைக்காமல் அழித்து, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் கட்டளையிட்டபடியே, சுவாசமுள்ள எல்லாவற்றையும் சங்காரம்பண்ணி,(யோசுவா 10:40)

கானான் பிரதேசம் முழுவதும் சபிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது, அதாவது, அழிவுக்கு அற்பணிக்கப்பட்டது. ஒவ்வொரு உயிரினமும் இறக்க வேண்டும் (உபா . 20:16-18; யோசு. 10:40).

என்றாலும், விதிவிலக்குகள் இருந்தன:

அழிவுக்கு விதிக்கப்பட்டவர்கள் தேவனுக்கு கீழ்படிந்தால் உயிர்வாழ முடியும்(உ.தா., இராகாப்)

தேவனுக்கு கீழ்படியாத இஸ்ரவேலர்கள் அழிக்கப்பட வேண்டியிருந்தது (உ.தா., ஆகான்).









தேவனுக்கு முன்பாக, கானானியர்களும் இஸ்ரவேலர்களும் சமமாக பார்க்கப்பட்டனர்: பாரபட்சமின்றி. வித்தியாசம் என்னவென்றால், சிலர் தேவனுக்கு எதிரான தங்கள் கலகத்தில் தொடர்ந்து ஈடுபடத் தேர்ந்தெடுத்தனர், மற்றவர்கள் அவருக்கு கீழ்படிய தேர்ந்தெடுத்தனர்.

இப்போதும், முடிவு நம்முடையதுதான். இயேசு வரும்போது, நாம் நம்முடைய சொந்த விருப்பத்தினாலே இரட்சிக்கப்படுவோம் அல்லது அழிக்கப்படுவோம்.

# அமைதியை தேடுதல்

ன் கண்காணிகளைச் சமாதானமுள்ளவர்களும், உன் தண்டற்காரரை நீதியுள்ளவர்களுமாக்குவேன்." (ஏசாயா 60:17பி)



இயேசுவே சமாதானத்தின் பிரபு என்று அழைக்கப்படுகிறார் (ஏசாயா 9:6). அவர் சமாதானத்தை கொண்டு வர வந்தார், அவர் சமாதானத்தோடு ஆட்சி செய்வார்(யோ 14:27; ஏசா 60:17).

ஆனால் அவருடைய சமாதான இராஜ்யம் ஒரு யதார்த்தமாக மாறும்வரை, நாம் போரில் ஈடுபட்டுள்ள ஒரு பிரதேசத்தில், நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான பிரபஞ்ச மோதலில் மூழ்கி இருக்கிறோம்.

தீர்க்கதரிசி எலிசாவை பிடிக்க சீரியப்படை தோத்தானை முற்றுகையிட்டபோது, தன்னை சுற்றியுள்ள பரலோகப் படை சீரியர்களை அழிக்கும்படி தேவனிடம் அவர் கேட்கவில்லை. அதற்கு பதிலாக, பார்வையற்ற சீரிய இராணுவத்தை சமாரியாவிற்கு அழைத்து செல்லும்படி கேட்டார், அங்கு சென்றதும், போரிடும் இரண்டு நாடுகளுக்கு இடையே அமைதியை ஏற்படுத்த முடியும் (2 இரா 6:12-23).



இதுவே இயேசு நமக்கு கற்றுக் கொடுத்த உதாரணம்: மோதலில் எப்போதும் அமைதியை தேடுங்கள். தீமையை நன்மையால் வெல்லுங்கள் (ரோ. 12:20-21).